**வருகின்ற 2019-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13.08.2019-ம் தேதி செவ்வாய் கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பவானி நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம் நடைபெற உள்ளது. கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் பொருட்கள் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.**

**முன்னிலை: திரு.S.M.பாரிஜான் பி.ஏ.,**
**தனி அலுவலர் (ம) ஆணையாளர்**

1

2. பவானி நகராட்சி தூய்மை இந்தியா திட்டம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மத்திய அரசின் MOUD துறையினர் Star Rating ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வழங்கி வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக பவானி நகராட்சியில் சேகரமாகும் திடக்கழிவுகளை திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி முறையே தரம் பிரித்து கையாளப்பட்டு வருகிறது. மேலும் Secondary Storage and Transportation செய்வது முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளது. எனவே, பவானி நகராட்சியினை குப்பையில்லா நகராட்சியாக ( Garbage free city) மூன்று நட்சத்திர அங்கீகாரம் ( Three star rating ) பெற சுய உறுதிமொழி சான்றிதழுக்கு (Self Declaration ) நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.359/2016/எச்1)

3. பவானி நகராட்சி திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நகராட்சியாக அறிவிக்கப்பட்டு ( ODF) தொடர்ந்து அத்தகைய நிலையே கடைபிடிக்கப்பட்டு வருகிறது. தற்போது அதன் அடுத்த நிலையான ( ODF +) சான்று பெறுவதற்கு நகராட்சி பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக இந்நகராட்சி பகுதியில் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலை தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது என்ற சுய உறுதிமொழி சான்றிதழுக்கு ( Self Declaration) நகராட்சி பகுதியில் திறந்த வெளியில் மலம் மற்றும் சிறுநீர் கழிப்பவர்களுக்கு அபராதம் விதிப்பதற்கும் நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1753/2015/எச்1)

4. பவானி நகராட்சியில் செயல்பட்டு வரும் மக்கும் குப்பைகளை(Wet wastes) கொண்டு Micro Composting Centre - I & II-ல் உரம் தயார் செய்யும் பணிக்கும் உலர்கழிவுகளை மறுசுழற்சி பணி, மாற்று எரிபொருளாக பயன்படுத்துதல் மற்றும் இதர பயன்பாட்டிற்கும் தரம் பிரித்து அனுப்புவதற்கான வளமீட்பு மையத்தில் (Resource Recovery Centre)-ல் பணி மேற்கொள்ளவும், தினமும் 19 பணியாளர்களை (மேற்பார்வையாளர் ஒருவர் உட்பட) வழங்கிடும் பணிக்கும், ஆகும் செலவினத்திற்கும் ஏற்கனவே நகர்மன்ற தீர்மான எண்: 154, நாள்: 28.06.2019-ல் ஒப்புதல் வழங்கியுள்ளது இதன் பேரில் 08.08.2019-ல் இப்பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்த புள்ளி விலை விகிதம் (நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கான விலைவிகிதம்) |
|---|---|---|
| 1 | Relyon Facility Services Pvt Ltd, 142, 5th Cross Street, Sri Sai Nagar, Okkiam Thoraipakkam, Chennai | ரூ.401 /– |
| 2 | Trust Us Outsourcing Solutions Private Ltd, | |

| | | |
|---|---|---|
| | 117, 28'th Street,<br>Balaji nagar, Chennai. | ரூ. 398/– |

<u>அலுவலக குறிப்பு:–</u>

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2ல் குறிப்பிடப்பட்டுள்ள Trust Us Outsourcing Solutions Private Ltd, 117, 28'th Street, Balaji nagar, Chennai அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் குறைவாக உள்ளதை மன்றம் ஏற்கலாம். 19.08.2019ஆம் தேதி முதல் 130 வேலை நாட்களுக்கு நாள் ஒன்றுக்கு 19 பணியாளர்கள் (ஒரு மேற்பார்வையாளர் உட்பட) வீதம் பணிக்கு வழங்க Trust Us Outsourcing Solutions Private Ltd, 117, 28'th Street, Balaji nagar, Chennai அவர்களுக்கு உத்திரவு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 568/2019/எச்1)

5 .பவானி நகராட்சியில் உள்ள 27 வார்டு பகுதிகளிலும் டெங்கு மற்றும் கொசுக்களால் பரவும் நோய்களை கட்டுப்படுத்திட அபேட் மருந்து தெளித்தல், கொசுப்புழுக்களை அழித்தல் மற்றும் புகை மருந்து தெளித்தல் போன்ற பணிகளுக்கு தினமும் 35 பணியாளர்களை (DBC Workers) நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ள வெளிப்பணி ஒப்படைப்பு முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரி M/s Trustus Outsourcing Solutions Pvt, Ltd, Chennai அவர்களுக்கு உத்திரவு வழங்கப்பட்டு நோய் தடுப்பு பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ந.க.எண்: 217/2017/எச்1, நாள்: 26.06.2019 இன் படி நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.383/- (ESI and EPF உட்பட) என்னும் ஊதிய விகிதத்தின் அடிப்படையில் பணியாளர்களை வழங்க உத்திரவிடப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. DBC பணியாளர்களை 01.04.2018- முதல் தொடர்ந்து பயன்படுத்தி இந்நகராட்சியில் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதன் பலனாக பவானி நகராட்சியில் 2018ஆம் ஆண்டிலிருந்து நாளது தேதி வரை எந்தவொரு நபரும் டெங்கு நோயினால் பாதிக்கப்படவில்லை என்ற நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் பணியின் ஒப்பந்தகாலம் எதிர்வரும் 31.08.2019ம் தேதியுடன் முடிவடையும் நிலையில் பார்வை 1ல் காணும் M/s Trustus Outsourcing Solutions Pvt, Ltd, Chennai அவர்களின் 09.08.2019 ஆம் தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக ஒப்பந்த காலத்திற்கு பின்பு அதே ஒப்பந்த விகிதத்தில் தொடர்ந்து பணியாளர்களை வழங்கி பணி மேற்கொள்ள சம்மதம் தெரிவித்து கடிதம் வழங்கியுள்ளார்.

இந்நிலையில், பார்வை 3இல் கண்டுள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்தில் DBC பணியாளர்களின் எண்ணிக்கை முழுவதனையும் பற்றாக்குறையின்றி வருடம் முழுவதும் பணி மேற்கொள்ள பயன்படுத்திட வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார்கள்.

எனவே, நகரின் பொது சுகாதார நலன் கருதியும், நோய் தடுப்பு பணிகளின் அவசியம் கருதியும், மேற்படி ஒப்பந்த காலத்தினை 30.11.2019 ஆம் தேதிவரை நீட்டிப்பு செய்து நோய் தடுப்பு பணிகளை தொடர்ந்து நல்ல முறையில் மேற்கொள்வதற்கும், அதற்காகும் செலவினம் ரூ. 9.98 இலட்சத்திற்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:
மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். 217/2017/எச்1)

6. பவானி நகராட்சி திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நகராட்சியாக அறிவிக்கப்பட்டு ( ODF) தொடர்ந்து அத்தகைய நிலையே கடைபிடிக்கப்பட்டு வருகிறது. தற்போது அதன் அடுத்த நிலையான ( ODF +) சான்று பெறுவதற்கு நகராட்சி பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக இந்நகராட்சி பகுதியில் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலை தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது என்ற சுய உறுதிமொழி சான்றிதழுக்கு ( Self Declaration) நகராட்சி பகுதியில் திறந்த வெளியில் மலம் மற்றும் சிறுநீர் கழிப்பவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் என்பது குறித்தும், பொதுமக்களின் ஆட்சேபனைகள் மற்றும் கருத்துருக்களை பெறுவதற்கு மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், ஈரோடு அவர்கள் மூலம் மாவட்ட

அளவிலான தினசரி தமிழ் நாளிதழ் ஒன்றில் 10cm x 8cm அளவில் விளம்பரம் செய்திடவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 1753/2015/எச்1)

அலுவலககுறிப்பு:
மன்றம் அனுமதிக்கலாம்

7. பவானி நகராட்சியில் மேற்கொள்ளபட்டு வரும் பொது சுகாதார பணிகளான திடக்கழிவு மேலாண்மை, டெங்கு காய்ச்சல், கழிவறை பயன்படுத்துதல், மக்கும் மக்காத குப்பைகளை தரம் பிரித்து வழங்குதல், மழை நீர் சேகரிப்பு, பிளாஸ்டிக் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வினை நாடகம் மூலம் பொது மக்களிடையே ஏற்படுத்திட 12.08.2019ந் தேதி இந்நகராட்சியால் பின்வரும் விபரப்படி விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | விலைப்புள்ளியாளரின் பெயர் மற்றும் முகவரி | ஓர் இடத்தில் விழிப்புணர்வு நாடகம் நடத்திட ஆகும் விலைவிகித விபரம் |
|---|---|---|
| 1 | G. ஜெயபால் நாடக சபா, 24-பி, காமராஜர் தெரு, வண்ணிய தேனாம்பேட்டை, சென்னை - 18 | ரூ.6000/- |
| 2 | ஸ்ரீ வள்ளி நாடக சபா, 58, பெரியர் சிலை, வண்ணிய தேனாம்பேட்டை, சென்னை - 18 | ரூ.8500/- |
| 3 | நடராஜ் நாடக சபா, ராயல் தியேட்டர் ரோடு பவானி. | ரூ.7500/- |

மேற்கண்டவாறு பெறப்பட்டுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1-இல் குறிப்பிடப்பட்டுள்ள திரு. G. ஜெயபால் நாடக சபா, 24-பி, காமராஜர் தெரு, வண்ணிய தேனாம்பேட்டை, சென்னை - 18 அவர்களின் விலைப்புள்ளியானது மற்ற இரண்டை விட குறைவாக உள்ளது. எனவே, மேற்படி குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. G. ஜெயபால் நாடக சபாவிற்கு பணியை வழங்கவும், அதற்கான தொகையினை SBM (IEC) திட்ட நிதியிலிருந்து வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:
மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். 945/2019/எச்1)

8. துாய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 2018-19ஆம் ஆண்டிற்கு இந்நகராட்சிக்கான தனிநபர் கழிப்பிடங்கள்(IHHL) கட்டுவதற்கான இலக்கு 23 ஆகும். மேற்படி இலக்கான 23இல் 11 வீடுகளில் தனிநபர் கழிப்பிடங்கள் பயனாளிகளால் கட்டப்பட்டு அதற்கான மான்யம் விடுவிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 12 பயனாளிகள் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் உள்ள வீடுகளில் கழிப்பறைகள் கட்டப்பட்டு (Housing for All Scheme) முடிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்திரவு ந.க.எண்: 9884/2018/எச்1, நாள் 13.06.2018ன் படி 23 IHHL ற்கு மத்திய, மாநில அரசு மான்யம் ரூ.1,32,000/- பெறப்பட்டுள்ளது. இந்நிலையில் 08.08.2019ஆம் தேதியன்று மேட்டுபாளையம் நகராட்சியில் AEE, SWM O/o CMA, சென்னை அவர்களால் SBM-SWM திட்டப்பணிகளின் முன்னேற்றம் சம்மந்தமாக நடத்தப்பட்டு ஆய்வு கூட்டத்தில் பவானி நகராட்சியின் IHHL-ன்

கூடுதல் இலக்கினை 23இல் 12 வீடுகள் HFA திட்டத்தின் கீழ் வருவதால் 12 IHHL-ற்கான அரசு மானிய தொகையினை CMA அவர்களுக்கு திரும்ப அனுப்புமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, 12 கழிப்பறைகளுக்குரிய தொகை ரூ.72,000/- (GOI Share 12*4000=-48000, State Share 12*2000=24000) நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு திரும்ப அனுப்பி வைத்திட மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:
மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். 1753/2015/எச்1)

10. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் TN36D - 4020 வாகனத்தின் பேட்டரி பழுதடைந்து விட்டதால் வாகனத்தினை தொடர்ந்து இயக்குவதில் சிரமம் ஏற்படுகிறது. எனவே மேற்படி வாகனத்திற்கு புதியதாக Exide பேட்டரி 12 Volt 15 பிளேட் 100 Arms திறன் கொண்டது வாங்கி பொருத்தி கொள்வதற்கும் அதற்காகும் செலவினத்திற்கும் ரூ.9500/-ற்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:
மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.20/2018/எச்1)

10. பவானி நகராட்சி தூய்மை இந்தியா திட்டம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மத்திய அரசின் MOUD துறையினர் Star Rating ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வழங்கி வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக பவானி நகராட்சியில் சேகரமாகும் திடக்கழிவுகளை திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி முறையே தரம் பிரித்து கையாளப்பட்டு வருகிறது. மேலும் Secondary Storage and Transportation செய்வது முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளது. எனவே, பவானி நகராட்சியினை குப்பையில்லா நகராட்சியாக ( Garbage free city) மூன்று நட்சத்திர அங்கீகாரம் ( Three star rating ) பெற சுய உறுதிமொழி சான்றிதழுக்கு (Self Declaration), பொதுமக்களின் ஆட்சேபனைகள் மற்றும் கருத்துகளை பெறுவதற்கு மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,ஈரோடு அவர்கள் மூலம் மாவட்டஅளவிலான தினசரி தமிழ் நாளிதழ் ஒன்றில் 10cm x 8cm அளவில் விளம்பரம் செய்திடவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.359/2016/எச்1)

11. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சட்டசபையில் 110 விதியின் கீழ் தமிழகத்தில் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களுக்கு ரூ.2000/- நிதியுதவி வழங்கப்படும் என அறிவித்து உள்ளதால் பவானி நகராட்சிப்பகுதியில் உள்ள வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களின் பட்டியல்படி களப்பணிக்கு சென்று அக்குடும்பங்களின் ஆதார் எண். ஸ்மார்ட் கார்டு எண் மற்றும் வங்கி கணக்கு எண் போன்றவற்றை DBC பணியாளர்கள் மற்றும் பரப்புரையாளர்களை கொண்டு கூடுதல் விபரங்களை பெற வேண்டி உள்ளது. ஆன்லைனில் வரப்பெற்ற 6351 விண்ணப்பங்களை நகலெடுக்கும் பணி மேற்கொள்ளவும், கணக்கெடுப்பின் மூலம் பெறப்படும் ஆதார் எண். ஸ்மார்ட் கார்டு எண் மற்றும் வங்கி கணக்கு எண். போன்ற கூடுதல் விபரங்களை தினமும் Online -ல் TNCMA URBAN SEVA -ல் பதிவேற்றம் செய்ய வேண்டி உள்ளதால் இந்நகராட்சியில் புள்ளி விபர தொகுப்பாளர் பணியிடம் காலியாக உள்ளதால் வெளிப்பணி ஒப்படைப்பு முறையில் புள்ளி விபர தொகுப்பாளர்களை உள்ளூர் கணிணி நிறுவனங்களில் விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ள மன்ற அனுமதி

வேண்டப்படுகிறது. இப்பணிக்காகும் உத்தேச செலவினம் ரூ.75,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

12. பவானி நகராட்சியில் வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட குடும்பங்களுக்கு ரூ.2000/- நிதியுதவி வழங்கிட, கணக்கெடுக்கப்பட்ட விபரங்களை ஆதார் எண், வங்கி கணக்கு எண் மற்றும் ஸ்மார்ட் கார்டு எண் போன்ற விபரங்களை கணினி இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல் மற்றும் நகலெடுத்தல் (Xerox) பணிகளை மேற்கொள்ளவும் 17.07.2019ஆம் தேதியன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

**பெறப்பட்ட விலைப்புள்ளியின் விபரம்:**

**பணி எண்:1**

| **வ.எண்.** | **நிறுவனத்தின் பெயர்** | **ஒரு விண்ணப்பத்தினை இணையத்தில் பதிவேற்றம் செய்தல் விலைப்புள்ளி** | **ஒருவிண்ணப்பத்தினை நகலெடுத்தல் பணிக்கு மொத்தம் 6351 பக்கங்கள் (பக்கம் ஒன்றிற்கு விலைப்புள்ளி** |
|---|---|---|---|
| 1 | கோல்டு சாப்ட் கம்ப்யூட்டர், குமாரபாளையம் | ரூ.5/- | 0.75 பைசா |
| 2. | யுவ்ரஸ் நெட், மெயின்ரோடு, பவானி | ரூ.10/- | 1.25 ரூபாய் |
| 3. | ஏ.வி.ஆர்.கம்யூட்டர்ஸ், பவானி | ரூ.12/- | 1.00 ரூபாய் |

**அலுவலகக்குறிப்பு:**

1. பணி எண் 1-ன்படி பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்1ல் கண்டுள்ள M/S கோல்டு சாப்ட் கம்ப்யூட்டர்ஸ், குமாராபாளையம் அவர்களின் விலைப்புள்ளி மற்ற இரண்டை விட குறைவாக உள்ளதால் அதனை மன்றம் ஏற்கலாம்.
2. அவசர அவசியம் கருதி பணி எண்:1 M/s. கோல்டு சாப்ட் கம்ப்யூட்டர்ஸ், குமாராபாளையம் அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டமைக்கு மன்றம் அங்கரிக்கலாம்.

(ந.க.எண்.706/2019/எச்1)

**வருகின்ற 2019-ம் ஆண்டு ஆகஸ்ட்மாதம் 30.08.2019-ம் தேதி வெள்ளிக்கிழமை கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பவானி நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டம் நடைபெற உள்ளது. கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் பொருட்கள் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.**

**முன்னிலை: திரு.S.M.பாரிஜான் பி.ஏ.,**
**தனி அலுவலர் (ம) ஆணையாளர்**

1. இந்நகராட்சியின் திட்டப்பணிகள் சம்பந்தமான விளம்பரத்தினை கீழ்கண்ட நாளிதழ்களின் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | நாளிதழ் | பட்டியல் | தொகை.ரூ. |
|---|---|---|---|
| 1 | மாலை தமிழகம், சென்னை | 8495/06.01.2016 | ரூ.12,000/- |
| 2 | ஸ்ரீசக்தி பப்ளிகேசன்ஸ், ஈரோடு | 028/PS/BVN/ERD/05.02.19 | ரூ.24,725/- |

மேற்கண்ட விபரப்படி உள்ள தொகையினை அந்தந்த நாளிதழ்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். 438/2018/இ1)

2. பவானி நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் நிறுவப்பட்டு இயங்கி வரும் 125 KVA ஜெனரேட்டர் (Kirloskar) சர்வீஸ் செய்ய வேண்டியுள்ளது. கீழ்கண்ட பொருட்கள் மாற்ற வேண்டியுள்ளது.

1. Spinon Lube Oil Filter - 2 Nos
2. Fuel Filter Element Assly - 1 No
3. Fuel Filter element Pre-1 No
4. Premimum genine oil 20 litre can- 1no

மேற்கண்ட பொருட்களை மாற்ற kirloskar நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட Service Dealer ஆன திருவாளா; Electro Controls. ஈரோடு அவர்களிடமிருந்து விலைப்புள்ளி தொகை ரூ.7679/-க்கு பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட தொகை அந்த நிறுவனத்திற்கு காசோலையாக செலுத்தி மேற்கண்ட பழுது பணியை செய்து முடிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. 2019 -20 ஆம் ஆண்டு குடிநீர் நிதியிலிருந்து செலவை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண். 972/2019/இ1)

3. மாவட்ட ஆட்சித் தலைவர், ஈரோடு அவர்களின் ந.க.எண்.19791/2019/பஆ1 நாள்: 02.08.2019 கடிதத்தின்படி இந்திய செஞ்சிலுவை சங்கத்திற்கு பவானி நகராட்சி ஆண்டு சந்தாவாக தொகை ரூ.2500/-ஐ பொது நிதியிலிருந்து செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:  மன்றம்  அனுமதி வழங்கலாம்                    (ந.க.எண்.122/2018/ டி2)

4.

5.

6. இந்நகராட்சியின் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற ( ODF +) நகராட்சியாக தரம் உயர்த்தி துாய்மை இந்தியா திட்டத்தின் கீழ் சான்று பெற்று அந்நிலையினை தொடர்ந்து பராமரிக்கப்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் இதுகுறித்து பொதுமக்கள் ஆட்சேபணைகள் மற்றும் கருத்துருக்களை தெரிவிக்க தினசரி நாளிதழான "தினக்குரல்" நாளிதழில் 15.08.2019 -ஆம் தேதி அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி அறிவிப்பு வெளியீடு செய்தமைக்குரிய தொகை. 20,000/- வழங்க கோரி "தினக்குரல்" நிறுவனத்தினரால் பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:  மன்றம் அனுமதிக்கலாம்
(1038/2018/எச்1)

5. பவானி நகராட்சிப் பகுதியில் உள்ள அரசு / நகராட்சி பள்ளிகளில் உள்ள கழிவறைகள் பராமரிப்பு மற்றும் துப்புரவு பணிகளை மேற்கொள்வதற்கு தேவையான 15 துப்புரவு பணியாளர்களை வெளிப்பணி ஒப்படைப்பு முறையில் வழங்கிட தங்களுக்கு உத்திரவிடப்பட்டு M/s Relyon Facility Services Pvt ltd, சென்னை நிறுவனம் மூலம் பணியாளர்கள் விநியோகம் செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி செயல்முறை உத்திரவின் படி ஒப்பந்த காலம் 31.07.2019 ஆம் தேதியுடன் முடிவடைகிறது.

M/s Relyon Facility Services Pvt ltd, சென்னை அவர்களின் கடிதத்தின் வாயிலாக அதே நிபந்தனைகள் மற்றும் Terms and Conditions-க்கு 01.08.2019 ஆம் தேதி முதல் 30.11.2019-ஆம் தேதி வரையிலான காலத்திற்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.565/- விலை விகிதத்தில் தொடர்ந்து பள்ளி வேலைநாட்களில் நாள் ஒன்றுக்கு 15 பணியாளர்களை வழங்கி பணி மேற்கொள்ள சம்மதம் தெரிவித்து சம்மதக் கடிதம் இந்நகராட்சிக்கு வழங்கியுள்ளார்.

எனவே, இந்நகராட்சிக்கு 01.08.2019-ஆம் தேதி முதல் 30.11.2019ஆம் தேதி வரையிலான காலத்திற்கு நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.565/- என்னும் ஊதிய விகிதத்தில் தொடர்ந்து 15 பணியாளர்களை இப்பணியில் ஒப்பந்ததாரரான M/s Relyon Facility Services Pvt ltd, சென்னை அவர்களிடம் பெற்று தொடர்ந்து பள்ளியின் சுகாதார பணிகளை மேற்கொள்வதற்கு இதற்கான மொத்த செலவினம் 9.00 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. செலவினத்தினை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று 01.08.2019 முதல் பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.1878/2016/எச்1)

6. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் TN36B - 2655 வாகனத்தின் பேட்டரி பழுதடைந்து விட்டதால் வாகனத்தினை தொடர்ந்து இயக்குவதில் சிரமம் ஏற்படுகிறது.

எனவே மேற்படி வாகனத்திற்கு புதியதாக Exide பேட்டரி 12 Volt 15 பிளேட் 100 Arms திறன் கொண்டது வாங்கி பொருத்தி கொள்வதற்கும் அதற்காகும் செலவினத்திற்கும் ரூ.9500/-ற்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.20/2019/எச்1)

7. பவானி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நகராட்சி கட்டிடங்கள், ஆழ்துறை கிணறுகள், திறந்த வெளி கிணறுகள் மற்றும் திறந்த வெளி இடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்தி நிலத்தடி நீர்மட்டம் உயரும் வகையில் ஏற்கனவே நகராட்சி கட்டிடங்களில் உள்ள மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை பராமரிப்பு செய்யவும் மற்றும் இல்லாத இடங்களில் புதியதாக அமைக்க வேண்டியுள்ளதனால் இரண்டாம் கட்டமாக இதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. குடிநீர் நிதியிலிருந்து செலவை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1037/2019/இ1)

8.பவானி நகராட்சிக்குட்பட்ட பகுதி, மேட்டூர் மெயின் சாலையில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான ஆணையாளர் குடியிருப்பு கட்டிடம் பெயிண்டிங் அடித்து சில பராமரிப்பு பணிகள் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1.75 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது நிதியிலிருந்து பணியை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1044/2019/இ1)

9. பவானி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் 2016-17 -ன் கீழ் வார்டு எண். 17 அம்மன் நகர் பகுதியில் வளமீட்பு மையம் ( Resource Recovery Centre) கட்டும் பணி, மதிப்பீடு ரூ.18.27 இலட்சத்தில் கட்டப்பட்டுள்ளது. இந்த வளமீட்பு மையத்தில் சில கூடுதல் வேலைகள் செய்ய வேண்டியுள்ளது. இதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது நிதி 2019-20 -ல் செலவை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.1045/2019/இ1)

10. பவானி நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள தரைமட்டகுடிநீர் தொட்டி மற்றும் ஆற்று நீர் சேகரிப்பு தொட்டிகளை ஆகியவைகளை சுத்தம் செய்து பயன்படுத்த புதியதாக நீர்மூழ்கி மின் மோட்டார் ஒன்று வாங்கி பயன்படுத்தவும் மற்றும் ஆற்று நீர் சேகரிப்பு தொட்டியில் உள்ள 30HP மின்மோட்டார் எண். 1-ல் Foot valve -ல் துணி மாட்டியுள்ளதனால் மோட்டாரை இயக்க முடியாத நிலை உள்ளதை சரி செய்ய மோட்டாரை மேலே தூக்கி துணியை அகற்றி இயக்க செய்ய வேண்டியுள்ளது. ஆகிய பணிகளை செய்ய தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.60000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. குடிநீர் நிதி 2019-20 -ல் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1070/2019/இ1)

11. இந்நகராட்சியினை திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நகராட்சியாக (ODF + )நகராட்சியாக தரம் உயர்த்தி தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் சான்று பெற்று அந்நிலையினை தொடர்ந்து பராமரிக்கப்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் இதுகுறித்து பொதுமக்கள் ஆட்சேபனைகள் மற்றும் கருத்துருக்களை தெரிவிக்க தினசரி நாளிதழான "தினக்குரல்" நாளிதழில் 15.08.2019 ஆம் தேதி அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி அறிவிப்பு வெளியீடு செய்தமைக்குரிய தொகை ரூ.20,000/- வழங்க கோரி "தினக்குரல்" நிறுவனத்தினரால் பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.1038/2018/ எச்1)

12. இந்நகராட்சியினை Garbage Free City ( Three Star Ranking ) நகராட்சியாக அறிவிக்க பொதுமக்கள் ஆட்சேபணைகள் மற்றும் கருத்துருக்களை தெரிவிக்க ஏதுவாக தினசரி நாளிதழான "மதுரை மணி" நாளிதழில் 15.08.2019 ஆம் தேதி அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி அறிவிப்பு வெளியீடு செய்தமைக்குரிய தொகை ரூ.14,336/- வழங்க கோரி "மதுரை மணி " நிறுவனத்தினரால் பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.128/2015/ எச்1)

13. இந்நகராட்சி வாகனம் TN 36 D 4020 வாகனத்திற்கு 12 வோல்ட், 15 பிளேட், 100 ஆர்ம்ஸ் திறன் கொண்ட புதிய Exide பேட்டரி வாங்கும் பணிக்கு ஏற்கனவே நகர் மன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளதால் பேட்டரி விநியோகம் செய்ய விருப்பமுள்ள நிறுவனங்களிடம் இருந்து 26.08.2019 ஆம் தேதி விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | விலைப்புள்ளியாளரின் விபரம் | விலைப்புள்ளி வழங்கிய விபரம் (பழைய பேட்டரியினை எடுத்துக்கொண்டு ) |
|---|---|---|
| 1 | ஸ்ரீ பகவதி ஆட்டோ எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், 154 வர்ணபுரம் 4வது வீதி, மேட்டுர் மெயின் ரோடு, பவானி | ரூ.9250/- |
| 2 | ஸ்ரீ பவானி ஆட்டோ எலக்ட்ரிக்கல்ஸ், மேட்டுர் ரோடு, பவானி. | ரூ.9400/- |
| 3 | அன்னை டிரேடர்ஸ், 146 வர்ணபுரம் 4வது வீதி, பவானி. | ரூ.9500/- |

மேற்காணும் விபரப்படி பெறப்பட்ட விலைவிகிதங்களில் வரிசை எண். 1-ல் குறிப்பிட்ட M/S பகவதி ஆட்டோ எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், பவானி அவர்களின் விலைவிகிதம் மற்றவைகளை விட குறைவாக உள்ளதால் அதனை மன்றம் ஏற்கலாம்.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.0020/2019/எச்1)

14. பவானி நகராட்சிக்கு Capital Grant and Operation and Maintennance Gap filling Fund 2018-19 திட்டத்தின் கீழ் பழைய குடிநீர் இணைப்புகளில் ப்ளோகன்ட்ரோல் வால்வு பொருத்தும் பணியில் 4000 குடிநீர் இணைப்புகளில் ப்ளோ கன்ட்ரோல் வால்வுகள் பொருத்தும் பணி நடைபெற்று வருகின்றது. மேலும் கூடுதலாக விடுபட்டுள்ள குடிநீர் இணைப்புகளில் ப்ளோகன்ட்ரோல் வால்வு பொருத்த வேண்டியுள்ளது. இதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. குடிநீர் நிதியில் செலவை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1011/2019/இ1)